Malai Malar /
மாலை மலர்

16 NOV 2025



# புதுவை பல்கலையில் 2 நாள் பயிற்சி முகாம்

புதுச்சேரி, நவ.16—

புதுவை பல்கலைக்கழக சமுக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளியின் பெண்கள் ஆய்வுத்துறை மையம் சார்பில் வரலாற்றை படிப்போம், எதிர்காலத்தை எழுதுவோம் என்ற தலைப்பில் 2 நாள் பயிற்சி முகாம் நடந்தது.

பயிற்சி முகாமை துணை வேந்தர் பிரகாஷ் பாபு தொடங்கி வைத்தார். இந்திய மகளிர் ஆய்வாளர் சங்க தலைவர் கல்பனா கருணாகரன் தொடக்க உரையாற்றினார். பெண்கள் ஆய்வுத்துறை மையத்தின் இணை பேராசிரியர் மீனா கோபால் வரவேற்றார்.

பயிற்சி முகாமில் சுனீதா, கல்பனா கருணாகரன், சரஸ்வதி, சௌஜன்யா, தமலபாகுலா, அறுவி, ரேகாராஜ், கீதா, செல்வம் உள்பட சிறப்பு பேச்சாளர்கள் பங்கேற்று உரையாற்றினர். இணை பேராசிரியர் ஆசிதா நன்றி கூறினார்.